**வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் -பகுதி 01- 2020**

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் II, பீ.3 ஆம் பிரிவின் 2 ஆம் பட்டியலுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

பகுதி – 01 இன் நிதியளித்தல் உடன்படிக்கை பிரகாரம், முன்னாள் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சாகவிருந்த தற்போதைய பெருந்தோட்ட அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை அதிகரித்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு, விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மானியங்களை இணைத்தல் மற்றும் பகுதியளவு கடன் உத்தரவாதம் எனும் பெயரிலான 03 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,612 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 106.97 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,176 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 63 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 6,436 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 44 மில்லியன் மிகுதித் தொகை பயனாளிகளால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 15 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்கீட்டு குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு தனித்தனியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது பயனாளிகளின் பங்களிப்பைக் கணக்கீடு செய்வதற்கான பொறிமுறை காணப்படவில்லை. | செயற்திட்டமானது பயனாளிகளின் பங்களிப்பை இனங்காண வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் பங்களிப்புத் தொகை தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இணை மானிய கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் இணை மானிய கடன்கொடுத்தோர் கணக்கு என்பவற்றின் மீதி சமமாக இருக்க வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் அக் கணக்குகளுக்கு இடையே ரூபா 3,962,166 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நாங்கள் வேறுபாட்டுடன் இணங்குகின்றோம், இது நடைமுறை ஆண்டு - 2021 இல் கணக்கிணக்கம் செய்யப்படும். | வேறுபாட்டை இனங்கண்டு பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகள் பின்வரும் பெயர்களிலான 3 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(அ) முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு
(ஆ) விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மானியங்களை இணைத்து வழங்குதல்
(இ) பகுதியளவிலான கடன் உத்தரவாதம்

| இல. | கூறு | | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இணை மானியங்களை வழங்குதல் | (i) | இணை மானிய நிகழ்ச்சித்திட்டம், உயர் வறுமை நிலைகளுடன் கூடிய ஏழு முன்னுரிமை மாவட்டங்களில் ஏறத்தாழ 350 விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு உதவுவதற்காக முதலில் இனங்காணப்பட்டது, அதன் பின்னர் கொழும்பு உட்பட மேலும் 15 மாவட்டங்கள் செயற்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. புதிதாக சேர்க்கப்பட்ட இந்த மாவட்டங்களில் கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களுக்கு மொத்த ஒதுக்கீட்டில் 74 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. | இந்த இனங்காணப்பட்ட மாவட்டங்களில் பெரிய அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு மானியத் திட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு செயற்திட்டம் அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்தது. வறுமையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து குறைந்த பதில் காரணமாக, அதிக முதலீடுகளுடன் கூடிய சாத்தியமான செயற்திட்டங்களைக் கொண்ட ஏனைய மாவட்டங்களின் முதலீட்டு முன்மொழிவுகளை PMU கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் செயற்திட்ட செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) | செயற்திட்டம் 2020 திசெம்பர் 31 வரை 65 முன்மொழிவு கம்பனிகளுக்கு இணை மானியங்களாக ரூபா 1,184.07 மில்லியன் தொகையை அங்கீகரித்திருந்த போதிலும் அங்கீகாரத் திகதிகளிலிருந்து 6 முதல் 30 மாதங்கள் வரையிலான காலப்பகுதி கடந்த பின்னரும் இணை மானியங்கள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதம் முக்கியமாக பின்வரும் காரணங்களால் ஏற்படுகிறது; செயற்திட்டத்தைத் தொடங்கத் தயாராக இல்லை, கொவிட் காரணமாக, சட்டப்பூர்வ ஆவணங்கள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதில்லை, செயற்திட்டங்களைச் அமுல்ப்படுத்தும் நேரத்தில் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் மற்றும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதில் தாமதங்கள். | |
| | | (iii) ரூபா 341 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட மானியங்களிலிருந்து ரூபா 144 மில்லியன் தொகையான இரண்டாவது மானியம் 2020 திசெம்பர் 31 வரை விடுவிக்கப்பட்டிருக்காத போதிலும் முழுமையடையாத பணிகள் காரணமாக முதல் தவணைப்பணம் வழங்கப்பட்டதால் 5 முதல் 15 மாதங்கள் ஆகியுள்ளன. | செயற்திட்ட தன்மைக்கான முக்கிய நிகழ்வான செயற்திட்ட பணியை முன்மொழிபவரால் விரைவுபடுத்த முடியாததாலும் உலகெங்கிலும் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் தாமதம் ஏற்படுகிறது. | -மேற்படி- |
| | | (iv) 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 232 முதலீட்டாளர்களுக்கு இரண்டு முதல் மூன்று வருட காலமாக ரூபா 4,830 மில்லியன் பெறுமதியான அங்கீகரிக்கப்பட்ட மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன, ஆனால் ரூபா 57.83 மில்லியன் தொகையான 4 முதலீட்டாளர்கள் மாத்திரமே 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் அவர்களது முதலீட்டை பூர்த்தி செய்திருந்தனர். | இரு தரப்பினரும் தேவையற்ற தாமதங்களை நீக்குவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவுருக்களுக்குள் பகுதிகளை விரைவுபடுத்துவதற்கும் வேலை செய்கிறார்கள். | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் செயற்திட்ட செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பகுதியளவிலான கடன் உத்தரவாதம் | செயற்திட்டத்தின் பகுதியளவிலான கடன் உத்தரவாதக் கூறின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 7.12 மில்லியன் ஒதுக்கீட்டு தொகை 2020 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பகுதி கடன் உத்தரவாதம் தொடர்பான கணக்காய்வாளரின் பார்வை உண்மையானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் ஆகும். | இக்கடன் திட்டத்தை தனியார் வங்கி மூலம் அமுல்ப்படுத்துவதற்கான ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| நுண் மற்றும் சிறிய செயற்திட்டங்களுக்கான வணிக முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கு உதவியாளரைப் பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனை நிறுவனமொன்றுடன் செயற்திட்டம் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. எதிர்பார்த்த விளைவு அடைந்து கொள்ளப்பட்டிருக்காததால் ரூபா 1.97 மில்லியன் செலுத்திய பின்னர் ஒப்பந்தப் பணி நிறுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் திருப்திகரமான செயலாற்றல் மற்றும் வழங்கப்பட்ட சேவைகளிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு நியாயப்படுத்தப்படுகிறது. | செயற்திட்டத்தின் குறிக்கோள் பின்பற்றப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கடன்வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,869.38 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60.77 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 21.54 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,135.42 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.09 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடங்கப்பட்டதிலிருந்து 04 ஆண்டுகள் கடந்த பின்னர் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. | பயன்பாடு 33% ஆக உள்ளதுடன் 21.54% அல்ல. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு செயற்திட்ட நோக்கங்களை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 வழமைக்கு மாறான செயற்படுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நோக்கங்களுக்குப் பொருந்தாத விண்ணப்பங்களை அச்சிடுவதற்கு ரூபா 213,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவை விளைவற்று களஞ்சியங்களில் காணப்பட்டன. | இவ் விண்ணப்பப் படிவங்கள் அதே சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தியின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த உழவர் நலன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுவதற்காக அச்சிடப்பட்டன. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு செயற்திட்ட நோக்கங்களை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்திற்குச் சொந்தமில்லாத வாகனத்தின் திருத்தக் கிரயமாக ரூபா 270,000 தொகையை இச் செயற்திட்டம் செலவிட்டிருந்தது. | ஆரம்பத்தில் இச் செயற்திட்டத்தில் வாகனங்கள் எதுவும் காணப்படாததால் முன்னாள் வரிசை அமைச்சால் செயற்திட்ட பணிப்பாளருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தில் இந்த வாகன திருத்தம் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு செயற்திட்ட நோக்கங்களை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |